# அழகியலில் சுவை எனும் எண்ணக்கருத்து - ஒரு மெய்யியல் ஆய்வு

ஜெகநாதன், சோ

கிழக்குப் பல்கலைக்கழகம்.
*pavijegan85@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம் –** மெய்யியல் என்பது பல்வேறு ஆய்வுத் துறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மனிதனுடைய பல்வேறு சிந்தனையின் பரிணாமங்களின் உள்ளார்ந்த விடயங்களை ஆராயும் ஓர் இரண்டாம் தர ஆய்வாக மெய்யியல் விளங்குகின்றது. இதுவே மெய்யியலில் பல பிரிவுகள் தோன்றி வளரக் காரணமாயிற்று. அந்தவகையில் அழகியலோடு சம்பந்தப்பட்ட அழகு, கலை, சுவை, மேதகையழகு போன்ற பல்வேறு எண்ணக்கருக்களை மீள்பார்வைக்கு உட்படுத்துவது அழகியல் மெய்யியலாகும். அழகியல் மெய்யியல் ஆய்வு செய்யும் பல்வேறு எண்ணக்கருக்களுள் சுவை என்ற எண்ணக்கரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. சுவை என்பது அழகியல் மேம்பாட்டை வெளிப்படுத்த உதவுகின்ற ஒரு விளைவு என்றோ அல்லது ஒரு வகை அழகியல் நயப்பு என்றோ பொதுவாகக் கூறப்படின் அது முழுமையான விளக்கம் ஆகாது. சுவை எனும் பதம் சாதாரண வழக்கில் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது. சுவையுள்ள உணவு எனும் போது அது நாவின் சுவை என்ற அர்த்தத்தைக் கொண்டிருக்கும். இந்தக் கவிதை சுவையானது எனும் போது அது எமது உணர்ச்சியின் வெளிப்பாடாய் இருக்கும். சுவையினை ஒரு செயற்பாடாக, ஒரு விளைவாக, ஒரு ஊடகமாக, ஒரு உருவமாக பல்வேறு நோக்குகைகளுடன் தெளிவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. சுவை அல்லது சுவைத்தல் பற்றிய அனைத்துத் தீர்மானங்களும் அழகியல் தீர்மானங்களாகும். இத்தீர்மானம் அழகியல் சார் விடயங்களின் பிரதிபலிப்பை காண்போனுக்குத் தருகின்றது. அழகியல் தீர்மானம் என்பது அழகியல் சம்பந்தமாக ஒருவர் கொண்டிருக்கின்ற அல்லது வெளிப்படுத்துகின்ற மதிப்பீடு என்றும் கொள்ளப்படும். தனிப்பட்டவர்களது உளவியல்சார்ந்ததும் ஆளுமை சார்ந்ததுமான மதிப்பீட்டு எண்ணக்கருவாக அமைந்துள்ள சுவை மெய்யியலில் இன்றுவரை விவாதத்திற்குரியதாகவே உள்ளது. ஒப்பீடு, பகுப்பாய்வு, விமர்சனம் போன்ற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி சுவையின் இயல்பு, அதன் அர்த்தம், அதன் செயற்பாடுஎன்பவற்றை வைத்து ஆராய இக்கட்டுரை முனைகின்றது.

**திறவுச் சொற்கள் :** அழகியல்,அழகியல் தீர்மானம்,சுவை

## I. அறிமுகம்

தற்காலத்தில் பிரபல்யமாகப் பேசப்படும் மெய்யியல் நீண்ட வரலாற்றினைக் கொண்ட துறையாக விளங்குகிறது. வாழ்க்கையின் ஒட்டு மொத்த விடயங்களையும் இது ஆய்வு செய்கிறது. எல்லாத் துறைகளையும் தன்னுள் உள்ளடக்கி அவற்றைப் பகுப்பாய்வு செய்து அவற்றிலுள்ள உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வருவது தான் மெய்யியலாகும். மெய்யியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில்“Philosophy” என அழைக்கப்படுகிறது. இது “Philosophia”என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது.“Philosophia” என்பது Philo, sophia எனப் பிரிக்கப்பட்டு “Philo” என்பது விருப்பம் (டழளந) எனவும் “sophia”என்பது ஞானம் அல்லது அறிவு(Wisdom) எனவும் பொருள் கொள்ளப்படுகிறது[1].அதாவது மெய்யியல் என்பது அறிவுசார் மீதான வேட்கையைக் குறிப்பதாக விளங்குகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் ஒரு விடயத்தை முழுமையாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அதிலுள்ள உண்மைத் தன்மையை வெளிக்கொணருவதே மெய்யியலின் பணியாகும். அந்தவகையில் மெய்யியலின் முக்கிய பிரிவாக விளங்கும்அழகியல் மெய்யியலில் சுவையும் அது சார்ந்த விடயங்களும் முக்கிய ஆய்வுக்குரிய விடயமாக அமைந்துள்ளது.

சுவை எனும் பதம் சாதாரண வழக்கில் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது.சுவையுள்ள உணவு எனும் போது அது நாவின் சுவை என்ற அர்த்தத்தைக் கொண்டிருக்கும். இந்தக் கவிதை சுவையானது எனும் போது அது எமது உணர்ச்சியின் வெளிப்பாடாய் இருக்கும். அந்தவகையில் ஒக்ஸ்போட் அகராதி ஒரு விடயத்தினை விரும்புதல் அல்லது தெரிவுசெய்தல் என்ற நோக்கில், சுவை என்பது அழகினது அல்லது ஒருங்கிசைவினது புலனாகும் அல்லது புலனறிவாகும் எனக் கூறுகிறது.

18ம், 19ம் நூற்றாண்டுகளில் தெரிவினை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஒரு பதமாக சுவையை இணைய மெய்யியல் களஞ்சியம் சுட்டுகிறது. அழகியல் அனுபவத்தைத் தருகின்ற தீர்மானம் மற்றும் விமர்சனம்,இரசனை உய்த்தறிவு பற்றிய தெளிவு என்பதையும் இப்பதம் சுட்டி நிற்கின்றது. அழகுணர்ச்சி தரும் பொருட்கள் அனைத்தும் இரசனைக்குரியதே. ஆனால் அழகியலோ மதிப்பீடு சார்ந்தது. கலைப்பொருள் ஒன்றை அல்லது இயற்கைப் பொருளொன்றை சுவைக்கும் போது அதனை உணர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் அனுபவித்து சுவைக்கின்றோம். சுவைத்தலில் நேர்த்தியில்லாத போதும் சுவை பற்றிய தெளிவைப் பெறமுடியாது என்பதோடு அதனது தராதரங்களையும் முன்வைக்க முடியாது. எனவே சுவையினை அதன் அர்த்தம், அதன் தராதரம், அது பற்றிய தீர்மானம், அது பற்றிய உணர்வு முதலான வகையில் விளங்கிக் கொள்வது அவசியமாகும் [2].

## II. ஆய்வுப் பிரச்சினை

சுவை என்பது ஓர் அர்த்தம் சார்ந்த விடயமாகவும் ஒரு தீர்மானம் சார்ந்த புரிதலாகவும் விளக்கப்படும்

அதேநேரம் சுவை பற்றிய உணர்வு என்பது மனிதனுக்கு மனிதன் வேறுபட்டது.ஒருவர் ஒரு பொருளை அழகானது எனக் கூறி நேர்நிலைத் தீர்மானங்களை முன்வைக்க அதே பொருளை இன்னொருவர் அழகற்றது எனக் கூறி முரண்நிலைத் தீர்மானத்தை முன்வைப்பதையும் நாம் நடைமுறையில் காண்கின்றோம். ஓர் பொருள் அழகானதாகவும் அழகற்றதாகவும் ஒரு சமயத்தில் இருக்க முடியாது. எனவே சுவை என்பது காண்பவரது மனத்தில் உள்ளதா அல்லது காணும் பொருளில் உள்ளதா, கலைச்சுவையை அறிய ஒரு பொதுமையான தராதரம் உள்ளதா என்பது ஆய்விற்குரிய பிரச்சினையாகும்.

### III. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது பகுப்பாய்வு விமர்சன முறையியலிலாகும். எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது. குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Reading) தரவுகள் பெறப்பட்டு இங்கு ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

### IV. ஆய்வின் நோக்கம்

- சுவையின் அர்த்தம் பற்றியும் அதன் தராதரம் பற்றியும் விளக்குவது.
- அழகியல் மெய்யியலில் சுவையின் பல்வகை நோக்குநிலையினைத் தெளிவுபடுத்துவது.
- சுவை ஒரு தீர்மானமாக உள்ள முறைமையையும் அதுதொடர்பான பகுப்பாய்வினையும் எடுத்துக்காட்டுவது.

### V. சுவை பற்றிய மெய்யியல் பார்வை

மெய்யியல் ஆய்வு செய்யும் பல்வேறு எண்ணக் கருக்களுள் சுவை என்ற எண்ணக்கருவும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. சுவை என்பது அழகியல் மேம்பாட்டை வெளிப்படுத்த உதவுகின்ற ஒரு விளைவு என்றோ அல்லது ஒரு வகை அழகியல் நயப்பு என்றோ பொதுவாகக் கூறப்படின் அது முழுமையான விளக்கம் ஆகாது. இந்த அடிப்படையில் சுவையினை இருவேறு அணுகுமுறையின் அடிப்படையில் தெளிவுபடுத்த முடியும்.

1. பத அர்த்தத்தின் அடிப்படையிலும், பயன்பாட்டின் அடிப்படையிலும் தெளிவுபடுத்துவது.
2. சுவையை ஒரு தீர்மானம் எனும் நோக்கில் ஆராய்தல்.

அழகியல் செயற்பாட்டில் முக்கிய விடயமாக இருப்பது அழகியல் நயப்பும் அது பற்றிய மதிப்பீடு மற்றும் விமர்சனமும் ஆகும். கலைப்பொருட்கள் பற்றிய அபிப்பிராய பேதங்களுக்கு அடிப்படையாய் அமைவது சுவைத்தற் செயற்பாடாகும். சுவைத்தலின் தன்மை மாறுபாட்டிற்கேற்ப அதைப் பற்றிய கருத்து வெளிப்பாடும் மாறுபடும். நபர்கள், சூழ்நிலைகள், காலம் எனும் மாறிகளுக்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளிற்கேற்ப சுவையின் தராதரம் மாறுபடும். அழகியலில் நீண்ட காலமாக பிரச்சினைக்குரிய எண்ணக்கருவாக விளங்கும் சுவை பற்றிய ஆய்வானது பல்வேறு தளங்களில், நோக்கு நிலைகளில் தெளிவுபடுத்தப்படுகின்றது. சுவை என்றால் என்ன? சுவையைக் கொண்டு அழகை மதிப்பிடல் சாத்தியமா?அழகியற் பொருட்களை சரியாக மதிப்பிடுவதற்கு சுவையை ஒரு பொதுவான தராதரமாகக் கொள்ளலாமா? என்ற வினாவிற்கு விடை இருக்கும் போது சுவை எனும் எண்ணக்கரு பற்றிய தெளிவு பெறப்படும்.

சுவை என இங்கு குறிப்பிடப்படுவது அழகியல் சுவையாகும். இச்சுவையானது நாம் நாளாந்தம் அனுபவிக்கின்ற இனிப்பு, புளிப்பு, கசப்பு முதலான உடலியல் சுவையிலிருந்து வேறுபட்டது. உடலியல் சுவை ஆளுக்காள் மாறுபடுவது குறைவு. இச்சுவைகளைப் பிரித்தறியும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. இதற்கு எந்தவித பரீட்சய அறிவும் தேவையில்லை. ஆனால் சங்கீதம், ஓவியம் முதலான நுண்கலையோடு தொடர்புடைய சுவை எல்லோருக்கும் ஒரே மாதிரி அமைவதில்லை.இதனைஅறிவதற்கு பரீட்சய அறிவு தேவைப்படுகிறது. இந்த அடிப்படையில் சுவையினை நாம் இயல்பாக அறியக் கூடியது, பரீட்சயத்தின் மூலம் அறியக் கூடியது என இரு வகைப்படுத்தமுடியும். இதில் கலைச் சுவை பற்றிய அறிவு பரீட்சயத்தை முன் நிபந்தனையாகக் கொண்டதனால் அது உளவியல் சார்புடையது.இதனை சுயமாக விபரித்தலோ அல்லது விளங்கவைத்தலோ சிரமமானது.

சுவை பற்றிய கருத்தானது சாதாரண உரையாடல், மெய்யியல் உரையாடல், கலை மற்றும் இரசனை பற்றிய சொல்லாடல் என பல்வேறு வகைப்பட்ட

நிலைகளில் பயன்படுகின்றது. சுவைக்கென்று சில நியமங்கள் இருக்கின்றன. அதற்குரிய பண்புகள் கலையில் இருக்க வேண்டும் என்பது சாதாரணமான ஒரு எதிர்பார்ப்பாகும். அதேவேளை சுவைக்கென எந்தவித அளவீடுகளும் இல்லை என்ற வாதமும் இருக்கின்றது. ஏனெனில் ஒரு இசையை சுவைப்பது ஒரு திரைப்படத்தை இரசிப்பது என்பனவெல்லாம்தனிப்பட்டவரது உளவியல் சார்ந்ததும் ஆளுமை சார்ந்ததுமாகும். எனவே இவ்விரு வகையான சிந்தனைகளை எவ்வாறு ஒன்றாகக் கருதுவது அல்லது ஒருங்கிணைப்பது என்ற கேள்வி காலம்காலமாக எழுந்துவருகின்றது. இக்கேள்விக்கு முன்வைத்த பதில்களே சுவை பற்றிய பிரச்சினையாகும். இது அழகியல் மெய்யியலில் முக்கிய ஆய்வு மையமாக இருந்துவந்தது. சுவைபற்றிய கற்கையானது இரசனையை நிர்ணயிக்கும் காரணி மற்றும் காண்டல் மூலம் பெறுகின்ற உணர்வு முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஒரு பொருளை இரசிப்பது என்பது அதனுடைய அழகியல் பண்புகளை காண்பதைக் குறிக்கும். அழகியல் பண்புகளை உய்த்தறிவதற்காக அழகியற் காட்சி அல்லது சுவை அவசியமாகிறது. சுவைத்தல் நிகழ்வில் அழகியல் பண்புகளும், அம்சங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. புலனுறுப்புக்கள் மூலம் அழகியல் அம்சங்கள் உய்த்துணரப்படுவது அழகியல் காட்சி அல்லது சுவை எனக் கூறலாம். இக்காட்சி அல்லது அனுபவித்தல் எத்தன்மையானது எனக் கூறும் முறைமையை அழகியல் விபரிப்பு என்போம்.

ஒரு கலைப்பொருள் அதிகம் சுவைக்கப்படுமாயின் அது காண்போனது எதிர்வினைக்கு உடன்பாடானதாக இருக்கின்றது என்பதே இதன் அர்த்தம். எனவே அழகியல் அனுபவம் என்பது மகிழ்ச்சியை மட்டுமன்றி சுவையினது செயற்பாட்டையும் உள்ளடக்குகின்றது. இங்கு சுவை என்பது பகுத்தறிவிற்குட்பட்ட வகைப்படுத்தப்பட்ட அறிவாகும். இது தனித் திறமான மனப்பதிவுகளின் மன உணர்ச்சியினால் மட்டும் ஏற்படும் அறிவல்ல. இதனாலேயே சுவை என்பது குறித்த மனப்பாங்குகளை தன்னகத்தே கொண்டுள்ள அறிவுவகை எனப்படுகின்றது.

**VI. சுவை பற்றிய பல்வகை நோக்குநிலைகள்.**

சுவை எனும் பதத்தை பயன்படுத்தும் போது அது பல்வேறு நோக்குநிலைகளைப் பெறுகிறது. உதாரணமாக இந்தப் பழம் சுவையானது எனக் கூறுவது விபரிப்புக் கூற்றாகும். அதேநேரம் இக் கவிதை சுவையானது எனக் கூறும் போது உணர்ச்சிக் கூற்றாகும். இவ்விரு கூற்றுக்களும் சமமான அர்த்தத்தைக் கொண்டவையல்ல. எனவே கலைச்சுவையின் தராதரம் இவ்விரு நோக்கு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு பாகுப் பகுப்பாய்வு மூலம் வெளிக்கொணரக் கூடியதாக இருக்கின்றது.

சுவையை ஒரு சாதனம் அல்லது பொருள் என நோக்காது அதனை ஒரு ஊடகமாக நோக்குதல் பொருத்தமானது எனும் கருத்தும் உள்ளது. சுவை எனும் பதத்திற்கு ஒரு விமர்சன சக்தி உள்ளது. இச்சக்தி ஒரு பொருளை சுவைப்பதற்குரிய வழிவகையைத் தருகிறது. அதாவது கலைப்பொருளை அனுபவிக்கும் ஊடகமாக சுவை கருதப்படுகின்றது. மனித தொடர்புகளுக்கும் அழகியல் வியாக்கியானத்திற்கும் இது அடிப்படையாகின்றுத [3].இதனால்தான் சுவை ஊடகத்தன்மை கொண்டது எனக் கூறப்படுகின்றது. 20ம் நூற்றாண்டு அழகியல் சிந்தனையில் சுவையினை உருவகமாகக் கொள்ளும் பண்பு காணப்படும்[4]. அதாவது அர்த்தமானது உருவக நிலையில் வியாக்கியானங்களின் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டியதாகிறது. உதாரணமாக உலகமே ஒரு நாடக மேடை எனும் கூற்றை எடுத்துக்கொள்வோம். இதன் அர்த்தம் சாதாரண விடயம் போல் தென்பட்டாலும் இது மேலதிக வியாக்கியானத்தினை வேண்டிநிற்கும் ஒன்றாகும்.

சுவையை புலனுணர்ச்சியுடன் தொடர்புபடுத்தும் தன்மையும் காணப்படுகின்றது. சுவை பற்றிய வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்தும் முயற்சியானது புலனுணர்ச்சி பற்றிய அர்த்தத்தை தெளிவுபடுத்தும் முயற்சியாக இருக்கின்றது. சில வேளைகளில் எமது உளச்சுவைக்கும் புலனுணர்ச்சி சுவைக்கும் இடையிலான தொடர்பு ஒருங்கிசைவாக இருப்பதில்லை என்பதும் புலப்படுகிறது.

சுவை என்பது ஐம்புலன் விளைவைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற பதமாக இருக்கின்றது. உடலியல் சார்ந்த அர்த்தத்தில் சுவை என்பது மகிழ்வுடனும், மகிழ்வின்மையுடனும் தவிர்க்க முடியாதவாறு அமைந்துள்ளது. இவ்வாறு நேர்நிலை அல்லது மறைநிலை என்றவாறு பல்நிலை நோக்கில் சுவை விளக்கும் போது அது பற்றிப் பல வினாக்கள்

எழுகின்றன. அழகியல் இரசனையினது விடயம் என்ன? பார்ப்பவரது புலனின் அழகுப் பண்புகள் அமைந்திருக்கின்றனவா? கலையிலும் ஏனைய பொருட்களிலும் நாங்கள் இரசிக்கின்ற பண்புகளை சுவையின் தராதரங்கள் கொண்டிருக்கின்றனவா? சுவை நடைமுறையின் மூலம் மகிழ்ச்சிக்குரிய தராதரங்களை கொண்டிருப்போமாயின் எவ்வாறு சுவைகளைப் பிரித்தறிகிறோம். உயர்தரத்தில் இல்லாத கலைகளை நாங்கள் ஏன் விரும்புகின்றோம் என்பன சுவை பற்றிய பிரச்சினையின் மைய வினாக்களாக அமைகின்றன.

சுவை கருத்துப் பகுப்பாய்வுக்கு உட்படும் ஒரு பதமாக உள்ளது. எல்லா எண்ணக்கருவும் கருத்துப் பகுப்பாய்வை வேண்டி நிற்பதில்லை. வரைவிலக்கணப்படுத்தக்கூடிய எண்ணக்கருக்கள் எந்தவித குழப்பத்தை தராததால் அங்கு கருத்துப் பகுப்பாய்வு அவசியமில்லை. அதேநேரம் வரைவிலக்கணப்படுத்த முடியாத எண்ணக்கருக்களே கருத்துப் பகுப்பாய்வை வேண்டி நிற்கும். ஒரு எண்ணக்கருவிற்கு ஏன் வரைவிலக்கணம் வழங்க முடியாமற் போகின்றது என்ற வினா எல்லோர் மத்தியிலும் எழுகின்றது. கவர்ப்பாடான அர்த்தக் குழப்பத்தினை ஏற்படுத்துகின்ற எண்ணக்கருக்களே வரைவிலக்கணப்படுத்த முடியாதவை. இதனைத் தான் மொறிஸ்விற்" திறந்த எண்ணக்கரு எனக் குறிப்பிடுகின்றார். மெய்யியல் ஆய்வில் பிரச்சினைக்குரிய ஆய்வுகள் பிரச்சினைக்குரியவையே. அழகியல் ஆய்வில் சுவை பற்றி எழும் பிரச்சினைகள் அனைத்தும் திறந்த எண்ணக்கருக்களாகவே உள்ளன.

சுவையின் நோக்குநிலையானது அழகியற் பொருட்களை சுவைத்தல், சுவைத்ததை வெளிப்படுத்துதல் எனும் இரு செயற்பாட்டைக் கொண்டு விளங்குவதை நாம் அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும். அழகியல் வரலாற்றில் இந்த இரண்டு நோக்கு நிலைகளையும் அடிப்படையாக வைத்துசுவையின் நோக்குநிலை பற்றி பல்வேறு அறிஞர்களால் ஆராயப்பட்டுள்ளது. டேவிட்ஹியூம் சுவை என்பதற்கு தராதரம் ஒன்றினை வழங்க முற்பட்டமை அழகியல் ஆய்வில் ஒரு திருப்பு முனையை தோற்றுவித்தது. ஸ்பட்ஸ்பரி என்பவர் மனப் பதிவை அடிப்படையாகக் கொண்டு சுவையை விளக்கியிருந்தார். ஹட்ஷசனுடைய அழகியல் அழகையும் ஒழுக்கத்தையும் இணைத்த வகையில் சுவை பற்றிய கருத்தினை முன்வைத்திருந்தார். காண்ட் சுவைத் தீர்மானத்தை ஒரு முறைமைக்கு உட்படுத்தி விளக்கியிருந்தார். தர்க்கப் புலனெறி வாதத்தின் பின்னர் முக்கியமாக விக்கின்ஸ்ரைனின் மொழிப் பயன்பாடு அர்த்தம் பற்றிய கோட்பாட்டின் வருகைக்குப் பின்னர் ஒழுக்கம், அழகியல் சார்ந்த பிரச்சினைகள் பொய்யானவை என்று கூற முடியாதவை. எனினும் பொருளற்றவை என்ற வாதம் சுவை பற்றிய ஆய்வினை வலுவிழக்கச் செய்துவிட்டன.

சுவை பற்றிய ஆய்வில் அது எவ்வகையில் நிகழ்த்தப்பட வேண்டியது என்பதும் விவாதத்துக்குரியது. அந்த வகையில் கருத்தின் அடிப்படையிலும் தீர்மான நோக்கிலும் பல வாதப் பிரதிவாதங்கள் காலாகாலமாக முன்வைக்கப்பட்டிருந்தன. தீர்மானம் என்பது ஒன்றைப் பற்றிய மதிப்பீடு என கணிங்கம் கூறுகிறார்[5].இவர் அர்த்தத்தைத் தேடுதல் மட்டும் சுவை பற்றிய விளக்கம் ஆகாது என்றார். எனவே சுவை பற்றிய பிரச்சினை மதிப்பிடலுடனும் தொடர்புபட்டது என்பது புலனாகிறது. அதாவது சுவை எனும் பதம் விடயப் பண்புடன் தொடர்புபட்டது. ஆகையால் இதனை அர்த்தத்துடன் மட்டும் தொடர்புபடுத்தாது மதிப்பீட்டுத் தீர்மானம் என்ற வகையிலும் ஆராயவுள்ளது.

## VII. சுவை சார்ந்த தீர்ப்புக்கள் பற்றிய பகுப்பாய்வு

சுவை அல்லது சுவைத்தல் பற்றிய அனைத்துத் தீர்மானங்களும் அழகியல் தீர்மானங்களாகும். இத்தீர்மானம் அழகியல்சார் விடயங்களின் பிரதிபலிப்பை பற்றிய அறிவை காண்போனுக்குத் தருகின்றது. இவர்அழகு என்பதனையும் ஒருங்கிசைவு என்பதனையும் அடிப்படையாகக் கொண்டு தனது அழகியலை வடிவமைக்கின்றார். ஹட்சஷனின் கருத்துப்படி குறித்ததொரு இன்ப அனுபவத்தின் கருத்தே அழகு பற்றிய கருத்தாகும். இவ்வனுபவம் என்பது ஒரு குறித்த பொருளைப் பார்க்கையில் அல்லது கேட்கையில் நாம் பெற்றுக் கொள்வதாகும். ஹட்சஸன் அழகு எனும் விடயமானது ஓர் புலன் உணர்வுடன் தொடர்புபட்ட ஒன்று. இப்புலன் உணர்வானது விடயியுடன் தொடர்புபட்ட தன்மை கொண்டு காணப்படுகின்றது என விளக்குவதனூடாக சுவை எனும் எண்ணக்கரு, புலன் அனுபவம் மற்றும் புலன் உணர்வினை நாடி நிற்கின்து என்ற கருத்தை முன்வைக்கின்றார். அதாவது அழகியல் தீர்மானம் என்பது அழகியல் சம்பந்தமாக ஒருவர் கொண்டிருக்கின்ற அல்லது வெளிப்படுத்துகின்ற மதிப்பீடு என்றும் கொள்ளப்படும். அரிஸ்ரோட்டிலின்

கருத்துப்படி கலை என்பது மகிழ்விப்பது மட்டுமன்றி தனிப்பட்டவருக்கும் சமுதாயத்திற்கும் நன்மை தரக் கூடியதாக இருக்க வேண்டும். இதனைத்தான் அழகியலாளர்கள் தரம் என்கின்றார்கள். இதன்படி சுவை படைப்பின் தரத்தை அளவிடுவதாகும். இவ்வளவீட்டில் திருப்தி இல்லாத போது அது தன் இருப்பை இழந்துவிடும்.

தீர்மானத்தின் வகை ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாகக் காணப்பட்டாலும் கணிங்கம் இதனை பிரதான இரு வகைக்குள் அடங்குகிறது. நேர்வடிப்படையிலான தீர்மானம்,பெறுமானத் தீர்மானம் என்பனவாகும் [6]. நேர்வடிப்படையிலான தீர்மானம் தம் இருப்பை புறச்சூழலில் கொண்டிருக்கும். புறச்சூழலில் உள்ள விடயங்களை வியாக்கியானப்படுத்துவதே இத் தீர்மானத்தின் பண்பாகும். பெறுமானத் தீர்மானம் என்பது பொருட்களை இரசிப்பது அதனை மதிப்பிடுவது தொடர்பான செயல்களை ஆற்றுகிறது. இவ்வாறு தீர்மானம் நிரல்படுத்தப்பட்டாலும் அதன் தன்மை துறைக்குத்துறை வேறுபாடுடையதாகக் காணப்படும்.

**சுவைஞர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மூன்று படிமுறைகளில் இடம் பெறுகின்றன.**

முதலாவது வகை- கலைஞர்கள் தங்கள் சகபாடிகளுடன் கலைத் தொழில்நுட்பம் சம்பந்தமான உரையாடலில் ஈடுபடுதலாகும். அதாவது கலைநுட்பம் சம்பந்தமான விமர்சனமும் ஒப்பீடும் இடம்பெறும். இரண்டாம் வகை- இரசனையாளர்கள் சம்பந்தப்பட்டது. கலாரசனை தவிர்ந்த வேறு எல்லா வகையான சொல்லாடல்களையும் நிராகரிப்பர்.

மூன்றாம் வகை- இரசனையும் கலைநுட்பமும் சார்ந்த விமர்சனமாகும். ஓவியம், நாடகம், இசை முதலியவற்றை இரசிப்பவர்களாக மட்டுமன்றி கலைநுட்பம் தொடர்பான சொல்லாடலில் ஈடுபடுவதிலும் இன்பம் கொண்டவர்கள். முக்கியமாக கலைஞர்களின் நோக்கங்களை கலையாக்கத்துடன் தொடர்புபடுத்திப் பேசுவது இங்கு இடம்பெறும்.

சுவை பற்றிய ஆய்வில் தொழிற்படும் மாறிகளை இயற்கை, படைப்பு, கலைஞன், சுவைஞன் என நான்காக வகைப்படுத்தலாம். ஒரு தீர்மானத்தை செய்யும் போது இவற்றில் யாதாயினும் ஒன்றின் பாதிப்பு அதிகமாக இருக்க சாத்தியமுள்ளது. அழகு என்பது நிறைவு தரும் ஒன்றாயினும் அது சமனான மதிப்பீட்டிற்கு உள்ளாவதில்லை. படைப்பாளியினால் தனது படைப்பின் அழகை முழுமையாக மதிப்பிட முடியாது. இருப்பினும் சுவைஞனால் அதனை முழுமையாக மதிப்பிடக் கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

அழகியல் தீர்மானத்தின் தர்க்கம் பற்றியும் அதனது விடயத்தன்மை பற்றியும் பேசுவதனால் எந்தப் பயனும் இல்லை. இங்கு அழகியலாளருடைய பணி அழகியல் தீர்மானங்களை வாய்ப்புப் பார்ப்பதில்லை. மாறாக அழகியல் தீர்மானங்களை பரீட்சிப்பதாகவே இருக்கும். கலை விமர்சகர்களும் சாதாரண மக்களும் அழகியல் தீர்மானம் பற்றி முன்வைத்தவற்றைப் பகுப்பாய்வு செய்து அவற்றிடையேயுள்ள இடையுறவுத் தன்மைகளைப் பார்ப்பதுடன் விமர்சனம் மற்றும் சாதாரண சொல்லாடலில் பயன்படுத்தப்படுகின்ற எண்ணக்கருக்களையும் கருத்துக்களையும் பரீட்சிப்பதாகும்.சுவை பற்றிய தீர்மானம் உலகத்தைப் பற்றிய விபரிப்பாகவே தோற்றமளிக்கும். ஆனால் விபரிப்புக்கள் மாறாதவையாக இருந்தால் மன உணர்ச்சிசார் கூற்றுக்கள் திரிவுபடுத்தும் தன்மை கொண்டிருக்கும்.

கலைப்பொருள் பற்றிய அழகியல் தீர்மானங்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குறித்த பொருட்கள் எவ்வாறுதான் அளிக்கை செய்யப்பட்டாலும் சிலவேளைகளில் அதனை இரசிக்கவோ புரிந்துகொள்ளவோ முடிவதில்லை. அதேநேரம் வேறு சில பொருட்களை எந்தவித முயற்சியும் இன்றி சுவைக்கவும் விளங்கிக் கொள்ளவும் முடிகின்றது. ஒருவர் ஒரு பொருளை அழகானது எனக் கூறி நேர்நிலைத் தீர்மானங்களை முன்வைக்க அதே பொருளை இன்னொருவர் அழகற்றது எனக் கூறி முரண்நிலைத் தீர்மானத்தை முன்வைப்பதையும் நாம் நடைமுறையில் காண்கின்றோம். ஓர் பொருள் அழகானதாகவும் அழகற்றதாகவும் ஒருவருக்கு ஒரு சமயத்தில் இருக்க முடியாது. ஆனால் இத்தகைய சிக்கல்கள் அழகியல் ஆய்வில் இடம்பெறுகின்றன. அழகும் அழகின்மையும் தனிநபர் சார்ந்ததே தவிர பொதுமை பற்றியதல்ல. தனிநபர் ஒவ்வொருவரும் கல்வியறிவு, கலாசாரம், முற்கற்பிதம் முதலான பல புறக்காரணிகளின் ஆளுகைக்குட்பட்டவர்கள். இவர்கள் தங்கள் சார்பான விடயங்களையே நிலை நிறுத்த விரும்புவர். இதனால் தன்னுடன் இணைந்தவர்களையும் இதற்கு உடன்படும்படி கேட்பர். தனிநபர் சார்ந்த தீர்மானங்களில் அதேவகைச் சார்புடையவர்கள் ஒன்றுபட வாய்ப்புண்டு. பரிசோதனைக் குழாயினுள் குறித்த படிவத்தையிட்டு

பரிசோதித்து அளப்பது போன்று சுவையின் பெறு மானங்கள் அளக்கக்கூடிய படிமுறைகளைக் கொண்டதல்ல. ஒரு பொருளை சிறந்ததாக்குவது எதுவென்ற கேள்விக்கு ஒருவனுடைய இயல்பான சுவை, பொருளினது எதிர்வினை என இலகுவாக மாறக் கூடிய காரணங்களை மட்டும் முன்வைத்தமை இச்சிக்கலுக்குரிய அடிப்படையாகின்றது. இதனால் தான் அழகியல் தீர்மானமானது அதனை வழங்கு வோரைப் பொறுத்ததாக இருப்பதனால் அதனை விடயச்சுவை பற்றியது எனக் கூறமுடியாது என்பாரும் உள்ளர்.

தீர்மானம் தராதரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுவதோ விமர்சகனால் கூறப்படுவதோ அல்ல. ஒன்றைப் பற்றிய அபிப்பிராயத்தை தெரியப்படுத்துதலும் தீர்மானமே.இது சாதாரண தீர்மானமாகும். சாதாரண மனிதன் ஒருவன் குறித்த பொருள் அழகா, அழகற்றதா என மேற்கொள்ளும் தீர்மானமே சுவை பற்றிய தீர்மானமாகும். இத்தகைய தீர்மானத்தில் அவனுக்கேயுரிய அடிப்படைகள் காணப்படுகின்றது. அவையே அத்தீர்மானத்திற்குரிய தராதரங்களாகும். ஒரு அழகியல்சார் தராதரங்களை இன்னொரு கலைப்படைப்பின் மீது பிரயோகிக்க முடியாது. உதாரணமாக நவீன ஓவியத்தைப் பற்றிய தீர்மானத்தில் பாரம்பரிய தராதரத்தின் பயன்பாடு பொருத்தமற்றது. அத்தகைய படைப்புக்களை பல கோட்பாடுகள், தன்மைகள், உத்திகள் எனப் பல காரணிகளைக் கொண்டே விளங்கிக்கொள்ள வேண்டும். அத்தோடு கலைத் தீர்மானத்திற்கு சமூக அங்கீகாரம் அடிப்படையாக அமையும்.

அழகியலின் ஆய்வு மையமாக இருப்பது சுவையும் அது பற்றிய தீர்மானமே ஆகும். அதாவது அழகியல் முக்கிய இரு நோக்கங்களைக் கொண்டது.

1. அழகு பற்றிய தீர்மானங்களை அல்லது சுவை பற்றிய தீர்மானங்களை பற்றி தீர்ப்பளித்தல்
2. அழகு பற்றிய முறைமையான அம்சங்களை தனிமையாக்கல்

இதில் சுவை பற்றிய தனித் தீர்மானம் உண்மையோ பொய்யோ என தீர்மானிக்க முடியவில்லை. ஏனெனில் இவை விடையித் தன்மையுள்ள அழகியல் துலங்கலாகும். இதன் உள்ளார்ந்த விடயம் அழகியல் மேம்பாடு பற்றியதாகும். சுவை பற்றிய முறைமையான அம்சங்களை புரிந்துகொள்வதற்கு இரண்டு அம்சங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. சுவை பற்றிய விதிகளை/ அழகு சம்பந்தமான அனுபவ பொதுமையாக்கத்தைப் புரிந்து கொள்ளல்.
2. சுவையினது அடிப்படைத் தத்துவங்களை.∴ அழகு பற்றிய நியமம் சார் பொதுமையை அறிந்துகொள்ளல்.

இதன் மூலம் முறைமையான அம்சம் புரிந்து கொள்ளப்பட்டு சுவை பற்றிய ஒரு முழுமையான தீர்மானத்தை முன்வைக்க முடியும்.

சுவை பற்றிய தீர்மானத்தின் பொதுமை பற்றிய விளக்கத்தைத் தேடுவதற்கு நன்மை என்பதற்கும் சுவை என்பதற்குமிடையிலான தொடர்பை விளங்கிக் கொள்ள வேண்டும். இப்பண்பு விமர்சன முக்கியத்துவமுடையது. சுவையினது விடயங்களாக இருப்பவை ஒழுக்கத்தினது விடயங்களிலும் இருக்கின்றன.

அழகியல் நயப்பிற்குரிய பண்பு எதிலுள்ளது எனும் வினா சுவை பற்றிய தீர்மானத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அழகியல் நயப்பென்பது பொருளின் அடிப்படைத் தத்துவத்தில் தங்கியிராது அப்பொருள் கொண்ட துலங்களிலே உள்ளது. அழகியல் சுவை/ துலங்கல் மகிழ்வுடனேயே காணப்படும். இவ்வாறான சுவை உண்மை, நாட்டம், நடைமுறைப்பயன் நோக்கியதொன்றாய் இருப்பதில்லை. மகிழ்வென்பது மட்டுமே இப்படைப்புக்களின் நோக்கமாய் இருக்கும். சுவைத் தீர்மானம் நிறைவானதாக இருப்பதற்கு சுவைஞனிடத்தில் நியாய அறிவுசார் அழகியல் நடத்தைப்பாங்கு இருக்க வேண்டும். ஆனாலும் அழகியல் தீர்மானம் மேற்கொள்ளலில் பகுத்தறிவு சார்ந்த அழகியல் நடத்தைகள் செல்வாக்குச் செலுத்தினாலும் கூட தீர்மானம் முரண்பட சாத்தியமுள்ளது. பகுத்தறிவு சார் தன்மை உரிய தராதரத்துடன் தீர்மானத்திற்கு இட்டுச் செல்வதில்லை [7].இது ஒரு வகையான முற்கற்பிதம் என்றே கொள்ளப்படும்.

தற்காலத்தில் சுவைத்தல் தீர்மானங்களில் விடயத்தன்மை உடையதாக காட்டுவதில் அழகியலாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இவர்களது கருத்துப்படி சுவை பற்றிய தீர்மானம் உட்பட அனைத்து தீர்மானங்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுசார் விஞ்ஞான நிலை நோக்கைக் கொண்ட செயற்பாடாகும். ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு எப்போதும் விடய நிலைப்பட்டதாய் இருக்கும்.

பண்டத்தை நுகர்கையில் மனித உளம் தன்னுள்ளே உள்ளெடுத்துக் கொள்கின்ற அழகியல் மேம்பாடு அல்லது குறைநிறை என்பவற்றைத் தீர்ப்பளிக்கும்

ஒரு செயற்பாடாகவே சுவை உள்ளது. இத்தகைய சுவை பற்றிய தீர்மானம் அறிவு, அனுபவம், புலன் தெளிவு மற்றும் பொருட்களுடன் ஒப்பிட்டும் எடுக்கப்படுகின்றது. சுவைத் தீர்மானம் முரண்பட்ட வகையில் அமையுமாயின் முரணான பண்புகள் வெளிப்பட்டிருக்கும். தீர்மானத்திற்கு நியாய அறிவு பொதுவான தராதரமாக அமைந்தாலும் தீர்மான வகையில் குறைபாடுகளும் ஏற்படுகின்றது.

அழகியல் தீர்மானங்களின் தோல்விக்குக் காரணம் தனிநபர்சார் வாதத்தை இறுதி முடிவாக நிறுவுவதேயாகும். தனிப்பட்ட அவர்களது தீர்மானங்கள் விடயத் தன்மை அற்றதாக இருப்பது என்பது பொதுவான எதிர்பார்ப்பாகும். கலைப் பொருள் பற்றிய தீர்மானத்திற்கு பயன்படுத்துவது பற்றிய எந்தவொரு விதிகளும் தனிமனிதனிடம் இருப்பதில்லை.இதற்குக் காரணம் பகுத்தறிவு ரீதியான விவாதங்களில் பெற்ற தோல்வியேயாகும்.

## VIII. முடிவுரை

சுவை என்ற பதம் சாதாரண மொழிவழக்கில் வெளிப்படுத்தப்படும் அர்த்தத்திற்கும் அழகியல் மொழி வழக்கில் வெளிப்படுத்தப்படும் அர்த்தத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இவ் வேறுபாட்டை அறிய பரீட்சய அறிவு, அனுபவம் மட்டுமன்றி அதனுள் இருக்கும் சொல் அர்த்தமும் விளங்கிக் கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும். அழகியல் மெய்யியலில் சுவை பற்றி விளக்க வந்த கருத்துக்களும் கொள்கைகளும் இன்றுவரை விவாதத்திற்குரியனவையாகவே அமைந்துள்ளன. ஒருவருடைய உளவியல் மற்றும் ஆளுமை விடயங்கள் சார்ந்து கலைப் பொருட்களை அனுபவிப்பதன் தராதரம் வேறுபடும். ஒன்றைப் பார்ப்பதன் மூலம் சுவை இன்பத்தைப் பெறுவார்களாயின் சுவை பற்றிய நேர்நிலைத் தீர்மானத்தை வெளிப்படுத்துவர். அவ்வாறு சுவை இன்பத்தைப் பெறாதவர்கள் முரண்பாடான தீர்மானத்தை வெளிப்படுத்துவர். இதனையே நாம்அழகியல் மெய்யியலில் சுவைக்கான ஒரு பொதுவான தராதரமாகக் கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்

1. ஞானகுமாரன்.நா, (2003),மெய்யியல், செல்வம் வெளியீடு, யாழ்ப்பாணம், பக்க இல:02.
2. கிருஷ்ணராஜா.சோ., (1996), அழகியல், தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை, பக்க இல:33.
3. Dickie, George. (July 1999), "Evaluating Art: Reprise", The British journal of Aesthetics, vol-39, No: 03, P. 375.
4. Cambridge Dictionary of philosophy, (2000), Cambridge University press, P. 866.
5. Diffey.T.J., (Spring, 1985), "Art and Goodness: Collingwood's Aesthetics and Moore's Ethics Compared", The British journal of Aesthetics, vol-25, No: 02, P. 101.
6. Cunningham.G.W.,(1993), Problems of Philosophy, Discovery publishing House, New Delhi,P. 105.
7. Levinson, Jerald (1988), Aesthetics and Ethics, Essay at the intersection Cambridge University press, P. 36.